# தேவையுள்ளவர்களுக்குக் கொடுக்க நாம் கிறிஸ்துவால் நிரம்பியிருக்கவேண்டும்

Transcribed from a message spoken in January, 2014 in Chennai

By *R.S.Milton*

அப்பொழுது பேதுரு, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட," என்று சொல்லி... *(அப். 3:6).*

அப்போஸ்தலர்களாகிய யோவானும், பேதுருவும் தங்களிடம் பிச்சைகேட்ட முடவனிடம், "நீ எதிர்பார்க்கிற பொன்னும் வெள்ளியும் எங்களிடத்தில் இல்லை. ஆனால், எங்களிடத்தில் வேறொன்று உண்டு. அதை நாங்கள் உனக்குத் தருகிறோம். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட," என்று சொன்னார்கள். இது அப்போஸ்தலர்களாகிய யோவான், பேதுரு போன்ற வர்களுக்குத்தான் பொருந்தும் என்று நான் நினைக்கவில்லை. மாறாக, தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் இது பொருந்தும்.

### மனிதர்களின் தேவை பலவிதம்

ஏதோ ஒரு விதத்தில் தேவையுள்ள மக்களுக்குக் கொடுப்பதற்குரிய, தேவையுள்ள மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குரிய, ஒன்று தேவனுடைய மக்களாகிய நம்மிடம் இருக்க வேண்டும். மனிதர்களுடைய தேவைகள் வெவ்வேறு விதமானவை. அவை வெவ்வேறு கடின அளவிலே இருக்கும். சிலருடைய தேவைகளை இந்தப் பூமியிலே பூர்த்திசெய்யலாம் என்பதுபோல் தோன்றும். சிலருடைய தேவைகளை இந்தப் பூமியில் பூர்த்திசெய்வது சாத்தியமேயில்லை என்பதுபோல் தோன்றும். எடுத்துக்காட்டாக, மிகவும் நோய்வாய்ப்பட்ட சிலருடைய தேவைகளை இந்தப் பூமியிலே பூர்த்திசெய்வதற்கு ஒன்றுமே இல்லை. Terminally ill people. அவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்தப் பூமியிலே மனிதர்களிடம் ஒன்றுமே இல்லை. அவர்களுக்கு ஆறுதல்கூட கொடுக்க முடியாது. இதுபோல சிறிய தேவை தொடங்கி பெரிய தேவைவரை மனிதர்களுக்குக் கோடிக்கணக்கான தேவைகள் இருக்கலாம். ஆனால், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்மைத் தேடி வந்த, தம்மை அணுகிவந்த மனிதர்களுடைய தேவைகளை எப்போதும் பூர்த்திசெய்கிறவராக இருந்தார். ஒருவேளை அவர்கள் எதிர்பார்த்ததுபோல் அவர் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால், எப்போதுமே அவர் பூர்த்திசெய்தார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் பலதரப்பட்ட மக்கள் வந்தார்கள் என்று நமக்குத் தெரியும். அவர்களுடைய தேவை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அவைகளைப் பூர்த்திசெய்வதற்கு, நிறைவுசெய்வதற்கு, சந்திப்பதற்கு, தேவையான வளங்கள் அவரிடம் இருந்தன என்று நமக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால் எல்லா மனிதர்களுடைய எல்லாவிதமான தேவைகளையும் பூர்த்திசெய்வதற்குரிய வளங்கள் அல்லது திராணி இந்தப் பூமியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத்தவிர வேறு எந்த நபரிடத்திலும் இல்லை.

பெரும்பாலான சமயங்களில் நம் தேவைகளுக்காக நாம் மனிதர்களை நாடிச் செல்வோம் என்றால் வெறுங்கையாளர்களாகத்தான் நாம் திரும்பிவருவோம். அதுபோல, மக்கள் நம்மைத் தேடி வரும்போதும் வெறுங்கையர்களாகத் திரும்பிப்போவதற்கு வாய்ப்பு உண்டு.

### என்னென்ன கொடுக்கலாம்

#### பாடல்

தேவனுடைய மக்கள் சிலருடைய கூடுகைக்குச் செல்லும்போது அவர்கள் பாடுகிற பாடல் மனதுக்கு மிகவும் இதமாக இருக்கிறது. நம் இருதயம் அதனால் நெகிழ்கிறது. நீங்கள் அதை அனுபவித்திருப்பீர்கள். நேற்று நான் ஒரு திருமணத்திற்குப் போயிருந்தேன். அவர்கள் பாடின பாடல்களைக் கேட்டேன். "ஆசீர்வதியும் கர்த்தரே" என்ற பாடலைப் பாடினார்கள். அதைக் கேட்டபோது, "ஆ! இந்தப் பாடலை இவ்வளவு அழகாகப் பாடமுடியுமா!" என்று தோன்றியது. மிகவும் அழகாய், ஒரு பிசிறில்லாமல் பாடினார்கள். அந்தப்பாடல் உண்மையாகவே என்னைத் தொட்டது. இருதயத்துக்கு அவ்வளவு இதமாக இருந்தது. உடனே நான், "நாமும் ஐந்து அல்லது பத்துபேரைச் சேர்த்து பாடல்களைப் பயிற்சிசெய்து இப்படி நன்றாகப் பாடமுடியுமா?" என்று யோசித்துப்பார்த்தேன். அப்படிப் பாடும்போது, நம்மிடையே வருகிறவர்கள் அந்தப் பாடல்களைக் கேட்கும்போது

அது அவர்களுடைய இருதயத்துக்கு எவ்வளவு இதமாகவும், மனதுக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கும்! இல்லையா? முடிந்தால் யாராவது முயற்சி செய்யலாம். ஆனால் அதை என்னால் செய்ய இயலாது.

### தேவனுடைய வார்த்தை

இன்னும் சில தேவ மக்களுடைய ஐக்கியத்துக்கு, கூடுகைக்கு, நாம் செல்லும்போது அவர்கள் தேவனுடைய வார்த்தையை எடுத்துரைக்கிற விதம் நம் இருதயத்தை மிகவும் பிரகாசிக்கும். "ஆ! இதுதான் தேவனுடைய மனமா? இதுதான் தேவனுடைய எண்ணமா? இதுதான் தேவனுடைய திட்டமா?" என்று தேவனுடைய வார்த்தை தெள்ளத்தெளிவாக, வெட்ட வெளிச்சமாக நமக்குப் புலனாகிவிடும். எந்த அளவுக்கு என்றால், "இதற்கு முன்பு இப்படிப்பட்ட தெளிந்த வாக்கை நான் கேட்டதில்லை. இதற்குப் பின்பும் இப்படிப்பட்ட தெளிந்த வாக்கைக் கேட்பேனா என்று தெரியாது," என்று சொல்லும் அளவுக்கு தேவனுடைய வார்த்தையைத் தெளிவாக எடுத்துரைப்பார்கள். நம்மிடம் வருகிறவர்கள் நாமெல்லாரும் அப்படிப்பட்ட வார்த்தையைப் பேசுவதைக் கேட்கும்போது, "ஆ! இவர்கள் தேவனுடைய வார்த்தையை தெளிவாக, எவ்வளவு நேர்த்தியாக, எவ்வளவு ஆழமாக சொல்லுகிறார்கள்! இதைப்போல் நான் வேறெங்கும் கேட்டதில்லை," என்று யாரும் சொல்லிவிட முடியுமா என்று எனக்குத் தெரியாது.

### கூடும் சூழல்

சில தேவ மக்கள் கூடிவருகிற இடம், அந்தக் கட்டிடம், அந்தச் சூழல் ஆகியவைகளைப் பார்க்கும்போதே சிலருடைய மனதுக்கு மிகவும் இதமாக இருக்கும். அந்த அமைதியான சூழ்நிலை, நல்ல உயரமான கட்டடம் ஆகியவைகளைப் பார்க்கும்போதே அவர்களுக்கு இன்பமாக இருக்கிறது.

### பரிசுத்த ஆவியின் கொடைகள்

இன்னும் சில தேவனுடைய மக்களுடைய ஐக்கியத்துக்குப் போகும்போது அங்கு பரிசுத்த ஆவியானவருடைய கொடைகள் செயல்படுவதைப் பார்க்கும்போது...அந்நிய பாஷை பேசுவது, கைகளை வைத்துப் பிசாசுகளைத் துரத்துவது, சுகமாக்குவது போன்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்கள்.

பல எடுத்துக்காட்டுக்களைச் சொன்னேன். தேவனுடைய மக்களிடையே போகும்போது அவர்களுக்குப் பயனுள்ள விதத்திலே அவர்களுடைய இருதயத்தைத் தொடுகிற விதத்திலே ஏதோவொன்றை அவர்கள் பெறுகிறார்கள். அது பாடல்களாக இருக்கலாம், செய்திகளாக இருக்கலாம், அந்தச் சூழலாக இருக்கலாம், இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியின் வெளியாக்கமாக இருக்கலாம். நான் உடனே என்னைக் கேட்டுப்பார்க்கிறேன். "உண்மையிலேயே தனிப்பட்ட விதத்திலும், கூட்டாகவும் நம்மைச் சந்திக்கிறவர்களுக்கு நாம் எதைக் கொடுக்கப்போகிறோம்? கொடுப்பதற்கு நம்மிடம் என்ன உண்டு," என்று நான் என்னைக் கேட்டுப்பார்க்கிறேன்.

என் பதில் என்னவென்றால் இவைகளையெல்லாம் முடிந்தால் செய்வோம், முடியாவிட்டால் பொருட்டல்ல. நன்றாகப் பாடமுடிந்தால் பாடுவோம். பாட முடியாவிட்டால விட்டு விடுவோம். நேர்த்தியாக, தெளிவாக, ஆழமாக, தேவனுடைய வார்த்தையைப் பேசமுடிந்தால் பேசுவோம். பேச முடியாவிட்டால் விட்டுவிடுவோம். பேசுகின்ற சகோதரர்கள் இருக்கும்வரை பேசுவார்கள். ஒருவேளை அவர்கள் வேறு எங்காவது போய்விட்டால் என்ன நடக்கும் என்று நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். பேசுகிற சகோதரர்கள் வேறு எங்காவது போய்விட்டால் இந்த ஐக்கியமும் போய்விடுமா? போகாது. ஆமென். யார் செய்தி கொடுப்பது? அரைமணி நேரம் அல்லது முக்கால் மணிநேரம் யார் பேசுவது? இது உங்களுக்குத் திக்கென்று இருக்கிறதா? இதை யோசிக்கும்போதே...அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

பெந்தெகொஸ்தே சபைகளில் கூட்டம் முடிந்தபின் எல்லாரும் வரிசையாக நின்று ஜெபிக்கிறார்கள். வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிக்கிறார்கள். பிசாசு பிடித்தவர்களுக்காக ஜெபிக்கிறார்கள். இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் பல காரியங்கள் அங்கு நடக்கின்றன. சிலர் கீழே விழுகிறார்கள். இப்படி நடக்கின்றன. இப்படி நம்மால் செய்ய முடியலாம் அல்லது செய்ய முடியாமல் போகலாம். ஸ்கேவா என்னும் ஒரு யூதனுடைய குமாரர் ஏழுபேர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து, "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்,"

என்று சொல்லி பிசாசுகளைத் துரத்த முயன்றார்கள். ஒருவேளை நாமும் அப்படிச் செய்யலாம் அல்லது செய்ய முடியாமல் போகலாம்.

## இயேசுவின் நாமத்தில் என்பதின் பொருள்

ஆனால், நாம் ஒன்றைச் செய்ய முடியும். "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை. என் னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்," என்று அப்போஸ்தலர்களாகிய யோவானும் பேதுரு வும் சொல்வது வெறுமனே ஒரு சுகமாக்குதலை அல்லது குணமாக்குதலை அல்ல, மாறாக அவர்கள் தங்களிடம் உள்ள கிறிஸ்துவை சுகமாகவும், குணமாகவும் கொடுக்கிறார்கள். "நசரேய னாகிய இயேவின் நாமத்திலே நட," என்றால் என்ன பொருள்? "நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினாலே" என்பதை நாம் ஒரு வாய்ப்பாட்டைப்போல், சூத்திரத்தைப்போல் பயன்படுத்த வில்லை. மாறாக "இயேசுகிறிஸ்து என்ற நபரோடு இணைந்திருக்கிற, ஒன்றாக இருக்கிற, ஒன் றித்திருக்கிற நான் சொல்லுகிறேன். நான் சொல்வது அவர் சொல்வதற்குச் சமானம். அந்த நபர் இந்த இடத்தில் என்ன செய்வாரோ, அவருடைய சார்பாக, அவருடைய பிரதிநிதியாக நான் இதைச் செய்கிறேன். எழுந்து நடக்கலாம்," என்பதுதான் 'நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில்' என்பதின் பொருளாகும். அந்த நபர் இந்த இடத்தில் இதைச் செய்ய மாட்டார் என்றால் நானும் இதைச் செய்ய மாட்டேன். அந்த நபர் இதைச் செய்ய விரும்புகிறார். நான் அவரோடு ஒன்றாக இருக்கிறேன். அவருடைய பிரதிநிதியாக. எனவே அவருடைய பிரதிநிதியாக சார்பாக, "நீ எழுந்து நட" என்று நான் சொல்லுகிறேன்.

நம்மை அணுகுகிற, சந்திக்கிற மக்களுக்குக் கொடுப்பதற்கு நம்மிடம் ஒன்று இருக்க வேண்டும். தனியாகவும், கூட்டாகவும்... தனியாகவும் நம்மிடத்தில் இருக்க வேண்டும், கூட்டாகவும் இருக்க வேண்டும். அது என்னவென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நிறைவு நம்மிடம் இருக்க வேண்டும். ஒருவேளை நம்மிடையே ஒரு புதியவர் வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். நம் மிடையே வருகிற புதியவர்களைக்குறித்து நாம் ஒருநாளும் பதற்றப்பட வேண்டாம். புதியவர்கள் பலர் வருவார்கள். "ஐயோ! நம் பாடல்களைப்பற்றி அவர்கள் என்ன நினைப்பார்களோ! நம் முடைய பகிர்ந்துகொள்ளுதலைப்பற்றி என்ன நினைப்பார்களோ! நாம் பழகுகிற விதத்தைக் குறித்து என்ன நினைப்பார்களோ!" இதைப்பற்றியெல்லாம் நாம் பதற்றமடையக் கூடாது. புதிய வர்கள் வந்துவிட்டால் நம் கண்ணும் கருத்தும் புதியவர்கள்மேலேயே இருக்க வேண்டிய அவ சியம் இல்லை. நாம் வழக்கமாகக் கூடிவரும்போது இயல்பாக ஒருவரோடொருவரோடும், தேவ னோடும் எப்படி ஐக்கியம் கொள்ளுவோமோ அப்படி ஒருவரோடொருவரோடும் தேவனோடும் ஐக்கியம் கொண்டால் போதும். நம் இயல்பான வாழ்க்கை கிறிஸ்துவை அவர்களுக்குக் காண் பிப்பதாகவும் வழங்குவதாகவும் இருக்க வேண்டும். அவர்களுடைய தேவை என்னவாக இருந் தாலும் நம்மை அவர்கள் சந்திக்கும்போது அந்தத் தேவை அவர்களுக்குப் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

## தேவையுள்ளவர்களுக்குக் கிறிஸ்துவை வழங்க வேண்டும்

இது நம் ஜெபமாக இருக்க வேண்டும். "ஆண்டவரே, என்னைச் சந்திக்கிற அல்லது தேவ னுடைய இந்தக் குடும்பத்தைச் சந்திக்கிற மக்கள் ஒரு தேவையோடு வந்து அந்தத் தேவை பூர்த்திசெய்யப்படாமல் வெறுங்கையராய்த் திரும்பிப்போகக் கூடாது." பொதுவாக மக்கள் இப்படி ஜெபிப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். "ஆண்டவரே, வெறுமையாய் வந்து இந்தக் கூட் டத்தைவிட்டுப் போகும்போதும் வெறுமையாய்ப் போக விரும்பவில்லை. வெறுமையாய் வந் தோம். ஆனால், நிறைவான ஆசீர்வாதத்தோடு போக விரும்புகிறோம்," என்று மக்கள் ஜெபிப்ப துண்டு. அது நல்ல ஜெபம். அதில் எந்தத் தவறும் இல்லை. ஏனென்றால், ஒரு பக்கம், நாம் வெறுமையாய் வந்தாலும், நம் ஐக்கியத்தின்மூலம் ஓரளவு கிறிஸ்துவை நாம் பிறரிடமிருந்து பெறுகிறோம். ஆனால், நான் நினைக்கிறேன். இதைவிட இன்னும் நேர்த்தியான ஜெபம். "ஆண்ட வரே, வெறுமையாய் வருகின்ற மக்களை நான் வெறுமையாய் அனுப்பிவிடக்கூடாது. எங்களோடு அவர்கள் மூன்று மணிநேரம் செலவழித்தார்கள் அல்லது ஒருநாள் அல்லது ஒரு வாரம் செல வழித்தார்கள். அவர்களுடைய உள்ளான தேவையைப் பூர்த்தி செய்யும்," என்று நாம் ஜெபிக்க வேண்டும். "இந்த மனிதன் ஒரு வருடம் இங்கு இருந்தான். அவன் இந்த இடத்தை விட்டுக் கடந்துபோகும்போது ஏதோவொன்றை விட்டுவிட்டுச் சென்றான்," என்று சொல்வார்கள். அவர்கள் "கிறிஸ்துவுக்குரிய" என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல் போகலாம். ஆனால், "அந்த மனிதன் ஒன்றை எங்கள் வாழ்க்கையில் விட்டுச் சென்றான்," என்று அவர்கள் அதற்கு ஒரு சொல்வடிவம்

கொடுக்காமல் போகலாம். ஆனால் அவர்கள் மனதிலே, இருதயத்திலே அது நிரம்பியிருக்கும். அவர்கள் வேறு வார்த்தையைப் பயன்படுத்துவார்கள். “அவர் கொஞ்சம் வித்தியாசமானவர்” என்றுகூடச் சொல்லலாம். தெளிவான வார்த்தைகள் சொல்லாமல் போகலாம். ஆனால், நம்மால் அவர்களுடைய உள்ளான தேவையை ஏதோ ஒரு விதத்தில் சந்திக்க முடிய வேண்டும்.

ஆகவே, தனியாகவும் சரி, கூட்டாகவும் சரி, நம்மோடு தொடர்பு கொள்ளுகிற, உறவு கொள்ளுகிற, நம்மைச் சந்திக்கிற மக்களுக்கு அவர்களுடைய மிக உள்ளான, மிக உண்மையான தேவை என்னவோ...புறம்பாக அவர்களுக்கு பல தேவைகள் இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால், உள்ளாக ஒரேவொரு தேவைதான் இருக்கும். அந்தச் சமயத்தில், இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பணம் வேண்டும், தங்குவதற்கு இடம் வேண்டும், படிப்பு வேண்டும், படிப்பதற்கு பணம் வேண்டும், வேலை வேண்டும், திருமணம் வேண்டும் என்பதுபோல் தோன்றலாம். ஆனால், உண்மையான தேவை பணமாகவோ, படிப்பாகவோ, வேலையாகவோ, திருமணமாகவோ இருக்காது. உண்மையான தேவை, ஆழமான தேவை ஒன்றாக இருக்கும். இவைகளெல்லாம் அந்தத் தேவையின் மேலோட்டமான, மேற்போக்கான, புறம்பான வெளியாக்கங்கள்.

எனவே, தேவனுடைய மக்களாகிய நாம் ஒரு காரியத்தைக்குறித்து கண்ணுங்கருத்துமாக, சிரத்தையாக இருக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுப்பதற்குரிய கிறிஸ்துவை நாம் அந்தச் சமயத்தில் உற்பத்திசெய்ய முடியாது. ஏற்கெனவே நமக்குள் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவைத்தான் நாம், “பொன்னும் வெள்ளியும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்தில் இருக்கும் கிறிஸ்துவை நான் உனக்குத் தருகிறேன்,” என்று சொல்ல முடியும். “என்னிடத்தில் பொன்னும் வெள்ளியும் இல்லை. கொடுப்பதற்கு என்னிடம் கிறிஸ்துவும் இல்லை,” என்ற நிலையில் நாம் இருக்கக் கூடாது. பொன்னையும் வெள்ளியையும் கொடுப்பதைவிட கிறிஸ்துவைக் கொடுப்பது நல்லது. எனவே, ஒவ்வொரு நாளும் அது வேலையாக இருந்தாலும் சரி, படிப்பாக இருந்தாலும் சரி, போக்குவரத்தாக இருந்தாலும் சரி, நம் வீடாக இருந்தாலும் சரி நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்றால் தேவையுள்ள மக்களுக்குக் கொடுப்பதற்கு நாம் கிறிஸ்துவை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஒருவேளை இது கற்பனைபோல் தோன்றலாம். கிறிஸ்துவை நாம் ஓர் உற்பத்திப் பொருள்போல் நமக்குள் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம் என்றும், மக்கள் தேவையோடு வரும்போது நாம் உற்பத்திசெய்த கிறிஸ்துவை நாம் அவர்களுக்குக் கொடுக்கிறோம் என்பது ஒரு கற்பனைபோல் தோன்றலாம். ஆனால், அது நல்ல கற்பனை. அது வேதத்துக்கு, புதிய ஏற்பாட்டுக்குப் பொருந்தாத, முரணான, புறம்பான கற்பனை அல்ல. சிறுசிறு காரியங்களில் நாம் கிறிஸ்துவை வாழ்வதுதான் பெரிய காரியங்களில் ஒரு தேவையோடு இருக்கிற ஒரு மனிதனுக்குக் கிறிஸ்துவைக் கொடுக்கிற நிலைக்கு நம்மைக் கொண்டுவரும். சிறுசிறு காரியங்களில் நாம் கிறிஸ்துவை ஆதாயம் பண்ணவில்லையென்றால் பெரிய தேவை ஒன்று வரும்போது கொடுப்பதற்கு நம்மிடம் கிறிஸ்து இருக்க மாட்டார். அந்தச் சமயத்தில் “நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட” என்றோ அல்லது “பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் நாமத்தில் உன்னைத் துரத்துகிறேன்,” என்றோ சொல்வதற்கு நம்மிடம் ஒன்றும் இருக்காது. நாம் வெறுங்கையர்களாக இருப்போம்.

**கர்த்தருடைய பந்தி**

கிறிஸ்துவை உருவாக்குகிற எதையும் நாம் சிரமேற்கொண்டு சிரத்தையோடு செய்வோம். கிறிஸ்துவை உருவாக்குவதற்கு இதில் எந்தப் பயனும் இல்லையென்றால் நாம் அதைச் செய்யமாட்டோம். எடுத்துக்காட்டாக, நாம் இங்கு ஒரு பந்தியை அமைக்கிறோம். அந்தப் பந்தியை தேவனுடைய மக்கள் பலவிதமாகக் கொண்டாடலாம். ஒருவேளை இங்கு ஒரு மேஜையையும் அதின் மேல் அப்பத்தையும் திராட்சைரசத்தையும் வைத்து அதில் நாம் பங்குபெறுகிறோம். அது ஒருவித இருதயக் கிளர்ச்சியை, மனக் கிளர்ச்சியை, உண்டாக்குகிறது. தேவனுடைய மக்கள் வெவ்வேறு விதமான உணர்ச்சிகளை அடைகிறார்கள். எடுத்துக்காட்டாக, பெந்தேகொஸ்தே மக்கள் அந்தச் சமயத்தில் மிகவும் மனம் உருகுவார்கள். “உனக்காக அடிக்கப்பட்ட கைகளைப்பார். உனக்காகக் குத்தப்பட்ட கால்களைப் பார்,” என்று உருகும்போது அது ஒருவிதமான உணர்ச்சியை உண்டு பண்ணும். பிரதெரன் மக்கள் அசையாத ஒரு கல்லைப்போல் நிதானமாக இருப்பார்கள். என்னுடைய கேள்வி என்னவென்றால் உண்மையிலேயே இது தேவனுடைய மக்களிடத்தில் தனிப்பட்ட விதத்திலோ, கூட்டாகவோ கிறிஸ்துவை உருவாக்குவதற்கு எந்த விதத்திலாவது உதவி செய்கிறதா?

ஆனால், சாப்பிடுவது நிச்சயமாகக் கிறிஸ்துவை உருவாக்குவதற்கு உதவி செய்யும். நீங்கள் சமைத்துக்கொண்டு வந்து பாருங்கள். சமைத்துக்கொண்டு நேரத்துக்கு வந்து பாருங்கள். அதில்

ஏகப்பட்ட கிறிஸ்து உருவாவார். அதில் நீங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டுப் பாருங்கள். அதில் கிறிஸ்து உருவாவதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன. நாம் குறை கண்டுபிடிப்பதற்கும், குறை சொல்லுவதற்கும் அல்லது மனம் நொந்துகொள்ளுவதற்கும் பற்பல வாய்ப்புகள் வரும். ஆனால் நாம் குறை காண்பதுமில்லை, சொல்வதுமில்லை, மனம் நொந்து கொள்வதுமில்லை என்றால் அது சாதாரண பந்தியல்ல. அது உண்மையிலேயே கர்த்தருடைய பரிசுத்த பந்தி. நாம் உண்கிற விதம் மிகவும் சாதாரணமான காரியம். ஒருவேளை குறைவாக இருந்தாலும் நாம் திருப்தியோடு சாப்பிடுகிறோம். நிறைவாக இருந்தாலும் நாம் திருப்தியோடு சாப்பிடுகிறோம். என்றைக்காவது குறைந்து போய்விட்டது என்ற நிலை தேவனுடைய மக்களுக்கு வராது. எப்படி வராதென்றால் நான் ஒரு காரியம் சொல்லுகிறேன். நாம் சாப்பிடும்போதும் ஆவிக்குரிய விதத்தில்தான் சாப்பிடு கிறோம். நன்றாக இருந்தால் நாம் இரண்டு மூன்றுமுறை போட்டுச் சாப்பிடலாம். குறைவாக இருந்தால் நாம் எப்படிச் சாப்பிடுவோம். கரண்டியைக் குழம்புக்குள் பலதடவை போட வேண்டும். நான் சொல்லுகிறது விளங்குகிறதா? கரண்டியைப் போடாத ஆள்போல் வரக்கூடாது. ஐந்து தடவை கரண்டியைப் போட்டுக் கோரவேண்டும். ஆனால், ஒவ்வொரு தடவையும் எவ்வளவுதான் எடுக்க வேண்டும்? கொஞ்சம்தான் எடுக்க வேண்டும். இப்படிச் செய்வதால் நம் வயது எண்பதி லிருந்து எழுபத்தைந்தாகக் குறைந்துவிடாது. நம் எடை 75லிருந்து 74ஆகக் குறைந்துவிடாது. நம் மகிழ்ச்சி அதனால் ஓர் அலகுகூடக் குறைந்துவிடாது.

ஒரு பந்தியை நாம் அநுசரிக்கும்போது உண்மையிலேயே தனிப்பட்ட விதத்திலும், கூட்டாகவும் கிறிஸ்து நமக்குள் உருவாக்கப்படுகிறார். நாம் சந்திக்கும்போதெல்லாம் இப்படிப்பட்ட பந்தியை அநுசரிக்கிறோம். ஒருவேளை நாம் நம் சகோதர சகோரிகளின் வீடுகளுக்குப் போகும்போது டீ பிஸ்கட் சாப்பிடுகிறோம் இல்லையா? அது என்ன? அது கர்த்தருடைய பந்தி இல்லையா? ஒரே வொரு ஜெபத்தைப் பண்ணினால் அது கர்த்தருடைய பந்தி. "ஆண்டவரே, பலராகிய நாம் உம் மில் பங்கு பெறுவதின்மூலம் ஒரே சரீரமாக இருக்கிறோம் என்பதை நாங்கள் நினைவு கூறு கிறோம்," என்ற இந்த ஒரு ஜெபம் டீ பிஸ்கட்டைப் பந்தியாக மாற்றிவிடும். இதைச் சொன்னால் தேவனுடைய மக்கள் நிறையப்பேர் இடறிவிடுவார்கள். "நீங்கள் என்ன இப்படிச் செய்கிறீர்கள்? பந்தியை எவ்வளவு பயபக்தியோடு ஆசரிக்க வேண்டும்! சகோதர சகோதரிகளின் வீட்டில் சாப்பிடுகிற டீ பிஸ்கட்டை நீங்கள் பந்தி என்று சொல்லிவிடுகிறீர்களே? சரி, நீங்கள் நற்கருணைப் பெட்டிக்குள் டீ பிஸ்கட்டை வைக்காமல் போனால் பரவாயில்லை. குறைந்த பட்சம் பிரதரென் மாதிரியாவது வைக்கலாமே. ஒரு பெந்தெகோஸ்தே மாதிரி வைக்கலாமே. நீங்கள் அதைவிடக் கீழே போய் டீ பிஸ்கட்டை, 'ஆண்டவரே, இந்தப் பந்திக்காய் நன்றி சொல்லுகிறோம்' என்று ஜெபித்து அதைப் பந்தி என்று சொல்லுகிறீர்களே," என்று சொல்லலாம். 1 கொரிந்தியர் 10ஆம் அதிகாரத்தையும், மத்தேயுவையும் நீங்கள் வாசித்துப் பாருங்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பஸ்காவை மிகவும் மகிழ்ச்சியோடு தன் சீடர்களுடன் சேர்ந்து சாப்பிட்டார், பகிர்ந்து கொண்டார். தேவனுடைய பிள்ளைகளோடு பகிர்ந்துகொண்டு வாழ்வது கிறிஸ்துவை நமக்குள் உருவாக்கும்.

பொதுவாக மக்கள் பகிர்ந்துகொள்வார்கள். ஆனால், பகிர்ந்து கொண்டபின் மனதிலே பலவித மான துன்பங்களும், துக்கங்களும், புகார்களும், குறைகளும், முறுமுறுப்புகளும், விசனங்களும், மனக்கலக்கங்களும் ஏற்பட்டு, "அவன் இப்படிச் செய்துவிட்டானே" என்று கலங்குவார்கள். ஊறு காய் கிடைக்கவில்லை என்றும், முட்டை கிடைக்காததைக்குறித்து யாரும் விசாரிக்கவில்லை என் பதற்காகவும் உறவை முறித்துக் கொண்ட தேவனுடைய மக்கள் இருக்கிறார்கள். யாரும் நம்மை விசாரிக்க வேண்டாம். ஆனால் நம் மகிழ்ச்சியில் எந்தக் குறையும் இருக்கக் கூடாது. இருக்காது.

## கிறிஸ்து உருவாகுதல்

"அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனிதரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு நம்முடைய முகங்களை நாம் மறைத்துக் கொண் டோம். அவர் அசட்டைப்பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற்போனோம்" (ஏசாயா 53:3). அவர் அவருக்காகத் துன்பப்படவில்லை. அவர் நமக்காகவே துன்பப்பட்டார். ஆனாலும், நாம் அவரை எண்ணாமற்போனோம். அதுபோல என்னுடைய நன்மைக்காக சகோதரர் துன்பப்படுகிறார். ஆனால், அவர் எனக்காகத் துன்பப்படுகிறார் என்பதைப்பற்றி எனக்குத் துளிகூட எண்ணம் இல்லை. நான் இராஜாபோல் வந்துவிட்டு இராஜாபோல் போய்விடுகிறேன். இந்த இடத்தில் கிறிஸ்துவை எப்படி ஆதாயம்பண்ணிக்கொள்ளலாம் என்றால், "ஓ! இவருக்காக நாம் எவ்வளவு தியாகம் செய்தோம்! எவ்வளவு துன்பங்கள் அனுபவித்தோம்! ஆனால், அவர் நம்மைக்குறித்து

யோசித்துக்கூடப் பார்க்கவில்லையே!" என்று அவர் நினைக்கவே இல்லையென்றால் மிகப்பெரிய அளவில் அவர் கிறிஸ்துவைச் சம்பாதித்துக்கொள்கிறார், ஆதாயம் பண்ணிக்கொள்கிறார்.

இது மக்கள் நம்மை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதுபோல் இல்லையா? ஆம், நிச்சயமாக அதுதான். "ஆதலால் நான் உங்களில் எவ்வளவு அதிகமாக அன்புகூறுகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்" *(2 கொரி. 12:15)* என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது, மற்றவர்கள் நம்மைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்றுதான் சொல்லுகிறார் என்று நான் நினைக்கிறேன். சில சமயங்களில் இந்த உலகத்தின் தரத்தின்படி தேவனுடைய மக்களை மற்றவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதுபோல் தோன்றலாம். அதற்கு நம்மை விட்டுக்கொடுக்கலாம். ஆனால், நாம் அப்படிச் செய்யக்கூடாது. "இவர்கள் உன் நேரம், பணம், உழைப்பு எல்லாவற்றையும் உன்னிடமிருந்து பிடுங்கிக்கொள்வார்கள். உன்னை நிர்க்கதியாக விட்டுவிடுவார்கள்," என்று மற்றவர்கள் சொல்வதற்கு நாம் ஒருநாளும் இடங்கொடுக்கக் கூடாது. தேவனுடைய மக்கள் என்னைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டால் அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. என்னைப் பொறுத்தவரை, பரிசுத்த ஆவியானவர் என்னை இப்படிச் செய்யச் சொன்னார். நான் செய்தேன். ஒருவேளை ஒரு சகோதரனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து உதவி செய்யவேண்டும் என்று சொல்லுகிறார் என்றால் நான் செய்வேன். ஆனால் அவர் நம் கூடுகைக்கு, ஐக்கியத்துக்கு வரவில்லை என்று வைத்துக்கொள்வோம். இதில் நமக்கு வருத்தம் வேண்டுமா என்றால் வருத்தம் வேண்டாம். எந்த வருத்தமும் வேண்டாம். பரிசுத்த ஆவியானவர் அந்தச் சமயத்தில் செய்யச் சொன்னார். நாம் செய்தோம். அவ்வளவுதான்.

## கிறிஸ்துவை வழங்குதல்

எனவே, அருமையான சகோதர சகோதரிகளே, நாம் கிறிஸ்துவால் நிறைந்த மக்களாக இருக்க வேண்டும். "நான் கிறிஸ்துவால் நிறைந்திருக்கிறேன்," என்று என்னை நானே தட்டிக்கொள்ளக் கூடாது. தேவையுள்ள ஒருவர் வரும்போது ஒரு பாடலைக் கேட்டு தொடப்படுவதல்ல. ஒரு செய்தியைக் கேட்டு தொடப்படுவதல்ல, ஓர் அற்புதத்தைப் பார்த்து தொடப்படுவதல்ல. "இவையெல்லாவற்றையும்விட உயர்ந்த, இவையெல்லாவற்றையும்விட ஆழமான சொல்லமுடியாத கிறிஸ்துவை, விவரிக்கமுடியாத கிறிஸ்துவை நான் பெற்றுக்கொண்டேன். இங்கு என்னைக் காந்தம்போல் இழுக்கின்ற ஏதோவொன்று இருக்கிறது. வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒரு காந்த சக்தி இந்த மக்களிடம் இருக்கிறது," என்கிற உணர்வு அவர்களுக்கு வர வேண்டும். கிறிஸ்துவின் அளவு நம்மில் குறைவாக இருக்குமென்றால், நம் உள்ளமைப்பில் கிறிஸ்து அடிப்புவேலைப்பாடாய் உருவாக்கப்படாதிருப்பாரென்றால், "ஆண்டவரே, உம்மை என்னுள் உருவாக்கும்," என்பது நம் இருதயத்தின் கதறுதலாக இருக்க வேண்டும். நாம் யோசித்துப் பார்ப்போம்.

ஒருநாள் நாம் இந்த உலகத்தைவிட்டுக் கடந்துபோவோம். "நீர் இறந்தாலும் எங்கள் இதயங்களில் என்றும் வாழ்வீர்," என்று மக்கள் சுவரொட்டிகள் ஒட்டலாம், ஒட்டாமலும் போகலாம். முந்தியாவது சின்னத் துண்டுத்தாள்களில்தான் அச்சடித்து விநியோகித்தார்கள். இப்போது அப்படி அல்ல. பெரிய சுவரொட்டிகள் ஒட்டுகிறார்கள். நாம் யாருடைய இருதயத்திலும் வாழ வேண்டாம். சுவரொட்டிகளிலும் வாழ வேண்டாம். ஒருவேளை நம் பிள்ளைகள் சொல்வார்கள்: எங்கள் அன்புத் தந்தை எங்கள் இதயங்களில் வாழ்கிறார். அவர்களுக்கு மனைவி, கணவன், பிள்ளைகள் என்று பொறுப்புகள் வரும்போது அவர்கள் இதயத்தில் நம் நினைவுகள் கொஞ்சங்கொஞ்சமாக மங்கிப் போகும். இதைப்பற்றி நாம் வருத்தப்படுவோமா? "வாழ்கிறதற்கு இரண்டு உள்ளங்களாவது வேண்டாமா? என்று வருத்தப்படுவோமா? "இரண்டு இருதயங்கள்கூட இல்லையே" என்று நாம் வருத்தப்பட மாட்டோம். நாம் எங்கு வாழ்கிறோம் தெரியுமா? எத்தனை பேர்களிடம் எந்த அளவுக்கு நாம் கிறிஸ்துவை விட்டுச் சென்றோம் என்பதுதான் வாழ்க்கை. இதுதான் நாம் இந்தப் பூமியிலே விட்டுச்செல்கிற நித்திய எச்சம், நித்திய வைப்பு. இது ஏதோ கருகலான, மங்கலான, புரியாத காரியம் என்று நினைக்கவேண்டாம். உண்மையிலேயே இந்தப் பூமியிலே 'விடுவிப்பார் இல்லை' என்று கதறுகிற ஒரு மனிதனை அல்லது மனுஷியை அல்லது ஒரு குடும்பத்தை நாம் கிறிஸ்துவைக்கொண்டு விடுவிக்கிறோம் என்றால் அந்த விடுதலை அவர்கள் உயிருள்ளவரை மட்டும் அல்ல, நித்தியம் வரை நிற்கும். அவர்களும் இந்தப் பூமியைவிட்டு மறைந்து போவார்கள். நாம் விட்டுச் சென்ற, நாம் கொடுத்த, நாம் வழங்கின, நாம் சேவித்த, நாம் பணிவிடை செய்த கிறிஸ்து நித்திய நித்தியமாய் அங்கு இருப்பார். நாம் படங்களில் இருக்க மாட்டோம். இருதயத்

தின் நினைவுகளில் இருக்க மாட்டோம். எங்கு இருப்போம் என்று வரையறுக்க முடியாது. அவர்களுடைய வாழ்க்கையில் நித்தியத்திற்கும் நாம் இருக்கிறோம். அவர்களில் கிறிஸ்துவை நித்தியத்திலும் பார்ப்போம். நித்தியத்திலும் நாம் வழங்கின இந்தக் கிறிஸ்துவைப் பார்ப்போம். ஒருவேளை சுவிசேஷமாய் வழங்கின கிறிஸ்துவை நாம் நித்தியத்திற்கும் பார்க்க முடியும். கிறிஸ் துவை கொடுத்துதான் நாம் நண்பர்களைச் சம்பாதிக்க வேண்டும்.

எனவே, அருமையான பரிசுத்தவான்களே, நம் இருதயத்தின் கதறுதல், "ஆண்டவரே, கொடுப் பதற்குரிய கிறிஸ்துவை எனக்குள் உருவாக்கும், அப்படிப்பட்ட கிறிஸ்துவை நான் ஆதாயம் பண் ணிக்கொள்ள விரும்புகிறேன்" என்பதாக இருக்க வேண்டும்.

## தேவனுடைய மைய தரிசனம்

எப்போது இந்தக் கிறிஸ்துவை நாம் ஆதாயம் பண்ணிக்கொள்வோம் அல்லது ஆசையாய்ப் பின் தொடர்வோம் என்றால் தேவனுடைய வார்த்தையிலுள்ள மைய தரிசனம் நம்மை ஆளுகை செய்ய வேண்டும். இந்தத் தரிசனத்தை நாம் காண வேண்டும். இந்தத் தரிசனம் நம் வாழ்க்கையை ஆள வேண்டும். இந்தத் தரிசனத்தை நம்மால் எடுத்துரைக்கமுடிய வேண்டும். இந்தத் தரிசனத்தை நாம் பிறருக்குக் காண்பிக்க வேண்டும். வாழ்க்கையின் மூலமாகவும் வார்த்தையின் மூலமாகவும். அப் போது மற்றவர்களும் அந்தத் தரிசனத்தைப் பார்ப்பார்கள். தரிசனம் என்றால் நான் ஜெபம் பண் ணும்போது ஒரு காட்சி தோன்றியது என்பதல்ல. தரிசனம் என்றால் தேவன் நம் வாழ்க்கையிலும், தேவனுடைய மக்கள் எல்லாருடைய வாழ்க்கையைக் கொண்டும் இறுதியாக எதைச் செய்து முடிக்க விரும்புகிறார், எதை நோக்கி தேவன் வேலை செய்துகொண்டிருக்கிறார் என்பதைப் பற்றிய புரிந்துகொள்ளுதல்தான் தரிசனம்.

தேவனுடைய தரிசனத்தைப் புரிந்துகொள்வதற்காக நான் சில தலைப்புகளைச் சொல்லுகிறேன். இதைப்பற்றி நாம் பலமுறை பேசியிருக்கிறோம். இது ஒன்றும் புதிய சங்கதி அல்ல. முதலாவது **தேவனுடைய நித்தியத் திட்டம்**. இது நம் பாடல், வாழ்வின் கீதம், தேவனுடைய மக்கள் எல்லா ருக்கும் தேவனுடைய நித்தியத் திட்டம் என்னவென்பதைப்பற்றிய தெளிந்த அறிவு, தெளிந்த பார்வை, இருக்க வேண்டும். தேவனுடைய நித்தியத் திட்டம் நம் வாழ்வின் எல்லாப் பகுதிகளை யும்—சிறிய பென்சில் வாங்குவதிலிருந்து பெரிய வீடு கட்டுவதுவரை, திருமணம் செய்வதுவரை— நம் வாழ்க்கையை ஆளுகைசெய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் தேவனுடைய தரி சனம் நம் முழு வாழ்க்கையையும் ஆளுகைசெய்ய வேண்டும் என்று சொல்லும் போது அது நம் வாழ்வின் எல்லாப் பகுதிகளையும், எல்லா அம்சங்களையும் ஆளுகைசெய்ய வேண்டும். இரண்டா வது, **தேவனுடைய ஜீவன்**. மூன்றாவது, **கிறிஸ்துவில் தேவனோடு ஒன்றித்தல்** அல்லது தேவ னோடு ஒன்றித்த வாழ்வு, சேர்ந்த வாழ்வு, இணைந்த வாழ்வு. நான்காவது, **கிறிஸ்து நமக்கு எல்லாமுமாதல்**. ஐந்தாவது, **பரிசுத்த ஆவியானவரின் பணி சிலுவை உயிர்த்தெழுததல்**. ஆறா வது, **நம் உறவின் வாழ்க்கை**. ஏழாவது, **தேவனுடைய இறுதி இலக்கு**

இந்த வருடத்தில் ஒன்றைச் சாதிக்க முடிந்தால் அது நலமாயிருக்கும். இதைப்பற்றி எல்லாரும் தெளிவாக இருக்க வேண்டும். நாம் எல்லாரும் இந்தத் தரிசனத்தைப் பார்த்திருக்கிறோம். இந்தத் தரிசனம் நம் வாழ்க்கையை ஆளுகை செய்கிறது என்பதற்கு ஒரு நிரூபணம் என்னவென்றால் நாம் எல்லாரும் இதைப்பற்றி ஒரு சிறிதளவாவது மற்றவர்களுக்கு எடுத்துரைக்க முடிய வேண் டும். இதைப் பல விதங்களில் செய்யலாம். இரண்டு அல்லது மூன்று நாட்கள் பயிற்சி ஏற்பாடு செய்யலாம். இதற்குச் செய்திகளையெல்லாம் ஆயத்தம் பண்ணி ஒவ்வொரு செய்தியையும் பேசி முடித்தபின் ஒவ்வொருவரையும் திரும்பத் திரும்பப் பேச வைத்தால் எல்லாரும் இதைப்பற்றி பேச ஆரம்பித்து விடுவோம். இதை நாம் பேசிவிட்டோம் என்பதால் நாம் இந்தத் தரிசனத்தைப் பார்த்துவிட்டோம் என்றோ அல்லது இந்தத் தரிசனம் நம் வாழ்க்கையை ஆளுகைசெய்கிறது என்றோ நாம் நினைத்துவிட வேண்டாம். குறைந்த பட்சம் நம் அறிவைப் பொறுத்தவரையாவது இந்தச் சங்கதிகளை நாம் புரிந்துகொண்டோம். ஆனால், உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவர் நம் இருதயத்தில், நம் ஆவியில் அதைத் தரிசனமாக்கும்போது அதை ஒரு வெளிப்பாடாக மாற் றும்போது அது நம் வாழ்க்கையை ஆளுகை செய்யும்.

நான் முதலாவது சொன்னதற்கும் இதற்கும் தொடர்பு உண்டு. கிறிஸ்து நமக்குள் போதுமான அளவுக்கு உருவாக்கப்பட வேண்டும். ஏனென்றால், "எனக்குள் எவ்வளவு கிறிஸ்து இருக்கிறார் பாருங்கள்," என்று நம்மை நாமே பாராட்டிக்கொள்வதற்காக அல்ல, மாறாக தேவையுள்ள மக்க ளுக்குக் கிறிஸ்துவை வழங்குவதற்காக. கிறிஸ்து மட்டுமே அவர்களுடைய தேவையைப் பூர்த்தி

செய்வார். அப்படிப்பட்ட மக்களும், அப்படிப்பட்ட தேவைகளும் இந்த உலகத்தில் கோடா கோடி உண்டு. பலர் இன்னும் வெறுமையோடும், பசியோடும், தாகத்தோடும் “தங்களுடைய தேவையை யார் பூர்த்தி செய்வார்?” என்கிற ஒரு பரிதாபமான நிலையில்தான் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இந்தப் பொறுப்பு தேவனுடைய மக்களாகிய நம்மைச் சார்ந்தது. நம் வாழ்க்கையை இந்தத் தரிசனத்தின்படி அமைத்துக்கொண்டால் அல்லது வாழ்ந்தால் நிச்சயமாக நமக்குள் இருக் கிற கிறிஸ்துவின் அளவை-நம்முடைய பாடல்கள் அருமையாக மாறாமல் போகலாம், நம்முடைய செய்திகள் அருமையாக மாறாமல் போகலாம், நம்முடைய அற்புதங்கள் அருமையாக மாறாமல் போகலாம்–அதிகரிக்கும்; நமக்குள் இருக்கும் கிறிஸ்து அருமையானவராக மாறுவார். தனிப்பட்ட விதத்தில் நீங்கள் சந்திக்கிற மனிதர்களாக இருந்தாலும் சரி, கூட்டாக நாம் சந்திக்கிற தேவ னுடைய மக்களாக இருந்தாலும் சரி, அவர்கள் கதறுதலோடு உள்ள ஒரு தேவையைப் பூர்த்தி செய்யத்தக்க கிறிஸ்து நம்மிடத்தில் இருப்பார். வருகிற நாட்களில் இந்தத் தரிசனத்தைத் தெளி வாக பார்க்கத் தேவன் நமக்குக் கிருபை அருள்வாராக.

நாம் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது, இந்தத் தரிசனத்தோடு வாசிக்கும்போது, இது எனக்குப் புதிதாக இருக்கிறது. தேவனுடைய நித்தியத் திட்டம், கிறிஸ்துவின் ஜீவன், தேவனோடு ஒன்றித்த வாழ்வு, கிறிஸ்து எல்லாமுமாதல், பரிசுத்த ஆவியானவரின் பணி, உறவின் வாழ்க்கை, தேவனுடைய இறுதி இலக்கு. இந்த மைய தரிசனத்தோடு நாம் வாழும்போது அல்லது இந்த மைய தரிசனம் நம் வாழ்க்கையைப் பாதிக்க அல்லது நம் வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த நாம் விடும்போது உண்மையிலேயே நம்மூலம் வழங்கப்படுகிற, கொடுக்கப்படுகிற கிறிஸ்து, மற்றவர்கள் பெற்றுக்கொள்கிற கிறிஸ்து வல்லமையுள்ள, வீரியமுள்ள, ஆற்றலுள்ள கிறிஸ்துவாகவும், மிக அதிகமாகவுமிருப்பார்.